# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை எண் 19/2019, நாள்14.06.2019 இல் தொகுதி 4 தெரிவுக்கான 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கான 6491 காலிப்பணியிடங்களுக்கு அறிவிக்கையினை வெளியிட்டது. இதற்கான தேர்வு 01.09.2019 அன்று மாநிலம் முழுவதும் நடைபெற்றது. இதன் தேர்வு முடிவுகள், அதாவது தேர்வு எழுதியவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அவர்களது தரவரிசை ஆகியன 12.11.2019 அன்று வெளியிடப்பட்டது.

இதனிடையே, 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கான காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 6491 லிருந்து 9398 ஆக உயர்ந்துள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப்பணியிடங்கள் (பழையது) | காலிப்பணியிடங்கள் (புதிய எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1. | கிராம நிர்வாக அலுவலர் | 397 | 607 |
| 2. | இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) | 2688 | 4558 |
| 3. | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 104 | |
| 4. | வரித்தண்டலர் நிலை 1 | 34 | |
| 5. | தட்டச்சர் | 1901 | 2734 |
| 6. | சுருக்கெழுத்து - தட்டச்சர் நிலை III | 784 | 994 |
| 7. | நில அளவர் | 509 | 505 |
| 8. | வரைவாளர் | 74 | 0 காலிப்பணியிடங்கள் திரும்பப்பெறப்பட்டன) |
| | மொத்தம் | 6491 | 9398 |

தற்போது அதிகரிக்கப்பட்ட காலிப்பணியிடங்களும் கணக்கில் கொள்ளப்பட்டு, சான்றிதழ் சரிபார்ப்பிற்கென தெரிவு செய்யப்படவுள்ள தகுதியானவர்களின் பட்டியல் விரைவில் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

க.நந்தகுமார், இ.ஆ.ப.,
செயலாளர்.